# தொலைக்கப்பட்ட உறவுகள் தீபங்களாகும் போது.....



எம்காலம் முடிந்திடுமோ
எம்மவர்கள் வரமாட்டாரா?
உறவுகளைத் தேடிநாங்கள்
தெருத்தெருவாய்க் கூடிநின்றும் கூச்சலிட்டும்
வருடங்கள் பல கடந்தும்
வாழ்க்கையில் பல இழந்தும்
வாய்திறவா பாதைகளைத் தூக்கிக் காட்டி
புரிந்திடும் அவருக்கென்று அமைதியாய்த் தூங்கி நின்று
நல்வார்த்தை ஒன்றிற்காய்
தவமிருக்கும் ஜீவன்கள் நாம்

மனம் நொந்து மண்டியிட்டு
மடிப்பிச்சை கேட்கின்றோம்
மனமிரங்கி நம்குலதெய்வம் எங்கே சொல்



தினம் தினமாய் சற்றும் ஓய்வின்றி
கணம் கணமாய்க் கதறுகின்றோம்
நம் காவல் தெய்வம் எங்கேதான் சொல்
நம் குளறல்கள் அனைவரின் குமிறல்கள்
உன்காதில் கேட்கவில்லையெனின்
காலம் வரும் அது உன்னைக் காவு கொள்ளும்
அப்போ, உன் காதுகள் செயலிழந்து போயேதீரும்
உலக ஒலி உன் காதுகள் உணரா நிற்கும்
அந்த நாள் மாலையாய் இருக்கும், உனக்கோ இருளாத் தெரியும்
உன் உதடுகள் உளறத்துடிக்கும்
முழு அறிவு உன்னை வதைக்கும்
எம்பிறப்புகள் அப்போ தெரிவர்

பாதைகளைக் கையில் ஏந்தியும் நிற்பர்

உன்னை வதைக்கவல்ல

நீ செய்ததைத் திருப்பிச் செய்யவுமல்ல - நாம்

அவ்வினமும் அல்ல, மனிதர்

என்றுனக்கு உணர்த்திச் செல்ல.....

**- நான்தான் -**